பதிவு எண் M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆவணி 5 (21—8—72) திங்கள் — வெளியூர்: ஆவணி 6 (22—8—72) செவ்வாய் [இதழ்: 57

சில்லறை நாணயங்கட்குத் தட்டுப்பாடு ஏன்?

புதுடில்லி, ஆக. 21—

சில்லறை நாணயங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு குறித்து நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன.

"நாணயங்கள் அச்சடிக்க வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரத்தில்

(4-ம் பக்கம் பார்க்க)

விடுதலை விழாவில் கலந்துகொள்ள காமராசர் மறுத்தது ஏன்?

தேசியப் பொது விழாவாகக் கொண்டாட மனமில்லையா?

தியாகிகளை மதித்துப் போற்றுவதில் தி. மு. க. அரசுக்கு இணையுண்டோ?

தில்லைப் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் கலைஞர் வினா

சிதம்பரம், ஆக. 20—

"இந்திய விடுதலை நாள் வெள்ளி விழா, அண்மையில் நடைபெற்றது; 'டெல்லிக்கு அடுத்தபடியாகத் தமிழகத்தில் — சென்னையில்தான் இந்த விழா சிறப்புற நடைபெற்றது' என்று சொன்னால், யாரும் மறுப்பார் இல்லை!

"இதுபோன்ற தேசிய விழாக்கள், பிரான்சிலும் — இரஷ்யாவிலும் — அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்றால், கட்சி மாச்சரியங்களையெல்லாம் மறந்துவிட்டு எல்லாக் கட்சியினரும் ஒரே மேடையில் இருந்து பேசுவது உண்டு — செயல்படுவது உண்டு!

"1969-ம் ஆண்டில் அண்ணா மறைவுக்குப் பிறகு, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று — அந்த ஆண்டிலிருந்து தொடர்ந்து நடந்துவருகின்ற தேசிய விழாக்களை, ஒரு கட்சிக்குரிய விழாவாக இல்லாமல் அனைத்துக் கட்சியினரும் பங்கு பெறும் விழாவாக மாற்றியமைத்திருக்கிறோம்!

"இந்த ஆண்டு நடைபெறும் விடுதலை நாள் வெள்ளி விழாவில் தாங்கள் கலந்துகொள்ள வேண்டும் — என்று காமராசருக்குக் கடிதம் எழுதினேன்; அதிகாரிகள்கூட நேரில் அவரைக் கேட்டனர்; ஆனால் காமராசர், 'நான் டெல்லி செல்கிறேன் — வர இயலாது' என்று கூறிவிட்டார்; அதற்காக நான் மிக்க வேதனைப்பட்டேன்.

"ஏனென்றால் இந்திய விடுதலைக்காகப் பாடுபட்டவர்களிலே ஒருவர் காமராசர்; சென்னையில் அரசாங்கம் நடத்திய விழாவில் அவர் கலந்துகொண்டு பேசியிருந்தால், 'தேசிய விழாக்கள் அனைவருக்கும் பொதுவானவை' என்ற உணர்வை நாட்டு மக்களிடையே உருவாக்கியிருக்க முடியும்; ஆனால் அவர், டெல்லிக்குச் செல்வதாகக் கூறிவிட்டார்; 'சரி — அங்கே ஏதாவது ஒரு பெரிய விழாவில் கலந்துகொள்வார்' என்று எதிர்பார்த்தேன்; 16-ந் தேதி பத்திரிகைகளைப் பரக்கப் பரக்கப் பார்த்தேன் — நேரு மறைவுக்குப் பிறகு லால்பகதூர் சாஸ்திரியைத் தலைமையமைச்சராக்கியவர் ஆயிற்றே — லால்பகதூர் சாஸ்திரிக்குப் பிறகு திருமதி இந்திரா காந்தி தலைமை அமைச்சராவதற்குக் காரணமாயிருந்தவர் ஆயிற்றே — இந்திராவுக்கு எதிராக ஒரு 'சைன்யத்தையே திரட்டியவர் ஆயிற்றே — இந்தியா முழுவதும் அவரது கட்சி இல்லையென்றாலும் தமிழகத்தில் மட்டும் இருக்கிற அவரது கட்சியின் தலைவராயிற்றே — ஆகவே, டெல்லியில் நடைபெறும் விழாவில் சிறப்பான வரவேற்பு — சிறப்பான இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன்; ஆனால், பத்திரிகைகளில் அவர் கலந்துகொண்டது பற்றி எந்தச் செய்தியும் வரவில்லை!

ஆனால், இன்று அவரது கட்சி சார்பில் விடுதலை நாள் விழாக் கொண்டாடுகிறார்கள் — சென்னையில்; அது ஒரு கட்சிக்குரிய விழாவா? தேசியத் திருவிழாவுக்கு அவர் தரும் மதிப்பு இதுதானா?"

என்று, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், சிதம்பரத்தில் நடைபெற்ற மாபெரும் கழகப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி வினவினார்; இத்தொடர்பில், தியாகிகளை எந்த வகையில் கழக அரசு மதித்துப் போற்றுகிறது என்பதை விளக்கி மேலும் முதலமைச்சர் கூறியதாவது:—

"இவர்கள் தேசிய விரோதிகள் ஆயிற்றே — இவர்கள் ஏற்பாடு செய்திருக்கும் விழாவில் கலந்துகொள்வதா — என்று அவர்கள் கேட்கக்கூடும்.

வ. உ. சிதம்பரனார் கடைசிக் காலத்தில் காங்கிரசில் இருக்கவில்லை; காந்தியாரின் கொள்கையை மறுத்தார்; ஆனால் ஆரம்பக் காலத்தில் சுதந்தரத்துக்காகப் போராடியவர்.

அதுபோல், முத்துராமலிங்கத் தேவரும் இறுதிக் காலத்தில் காங்கிரசுக்கு எதிராக இருந்தவர்; ஆரம்பக் காலத்தில் அந்தக் கட்சிக்காகப் பாடுபட்டவர்.

அதுபோன்றே பெரியார் அவர்களும், ஆரம்பக் காலத்தில் தமிழ்நாட்டில் காங்கிரசுக் கட்சி கால்லூன்றுவதற்குக் காரணமாக இருந்தவர்!

நம்மைப் பார்த்து, 'சுதந்தரத்துக்குப் போராடியவர்களா' என்று கேட்பவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன் — 'நாங்கள் வைக்கம் வீரர் பெரியார் இராமசாமி அவர்களின் பரம்பரையினர்; ஆதலால் சுதந்தரத்துக்காகப் போராடியவர்கள் என்ற தகுதி எங்களுக்கும் உண்டு' என்று!

தியாகிகளை நாம் மதிக்க மறந்ததில்லை! 1966-ல் காங்கிரசுக் கட்சி ஆண்டபோது, சிறை சென்ற தியாகிகள் ஆறு பேருக்கு மட்டுமேதான் மாதம் ஐம்பது ரூபாய் மானியம் தரப்பட்டது.

நாங்கள் எண்ணியிருந்தால் — கழகம் ஆட்சிக்கு வந்தபோது — 'அது வேண்டாம்' என்று கூறி, மானியம் கொடுப்பதை நிறுத்தியிருக்கலாம்; ஆனால், 'தியாகத்தை மதிக்க வேண்டும்' என்ற கொள்கை கொண்ட நாங்கள், அந்தத் தியாகிகளுக்கு மானியம் தந்தோம்!

7,400 தியாகிகளுக்கு, 'மாதம் ஐம்பது ரூபாய்' என்று தந்து வருவது தி. மு. கழக அரசு; விடுதலை நாள் வெள்ளிவிழாவையொட்டி அந்த 7,400 தியாகிகளுக்கும் 'மாதம் ஐம்பது ரூபாய்' என்று வழங்கி வருவதை, 'மாதம் 75 ரூபாய்' என்று உயர்த்துகிறோம் — என சட்டமன்றச் சிறப்புக் கூட்டத்தில் அறிவித்தேன்.

தாமிரப் பத்திரம் பெற டில்லிக்குச் சென்றார்கள் — நமது தமிழ்நாட்டுத் தியாகிகள்; அங்கு வந்த பிற மாநிலத்துத் தியாகிகளைப் பார்த்து இவர்கள், 'உங்கள் மாநிலத்தில் மாதந்தோறும் தியாகிகள் மானியம் உண்டா' என்று கேட்டிருக்கின்றனர்; 'மானியமா — அப்படி என்றால் என்ன' என்று பெரும்பாலான தியாகிகள் கேட்டனராம்.

ஒரே ஒரு மாநிலத்தில்தான் அப்படி மானியம் அளிக்கப்படுவதாகப் பிறகு தெரிந்திருக்கிறது; 'எத்தனைப் பேருக்கு' என்று நமது மாநிலத் தியாகிகள் கேட்டிருக்கிறார்கள்; '30 பேருக்கு' என்று அவர்கள் கூறியிருக்கிறார்கள்;

ஆனால், நமது மாநிலத்தில் அளிக்கப்படும் மானியம் பற்றிக் கேட்டு அந்தத் தியாகிகள் மகிழ்ந்திருக்கிறார்கள்!

தமிழ்நாட்டில் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்ட நாமக்கல் கவிஞருக்கு மாதம் ரூ 250 அளிக்கவேண்டும் — என்று உத்தரவிட்டது கழக அரசுதான்!

பரலி நெல்லையப்பருக்கு மாதாந்திர உதவித் தொகை அளிக்க உத்தரவிட்டதும் கழக அரசுதான்!

'வீரச் சுதந்தரம் வேண்டி நின்ற கட்டபொம்மன் பரம்பரைக்கு உதவித் தொகை தரப்பட வேண்டும்' என்று என்னிடம் மகஜர் தந்தார்கள்; இதுபோன்ற மகஜர் காமராசர் காலத்திலும் தரப்பட்டது; ஆனால், அந்தக் கட்டபொம்மன் பரம்பரையினரின் மகஜரை ஏற்று — அந்தக் குடும்பத்தைச் சார்ந்த 10 பேருக்கு மாதந்திர உதவித் தொகை தர உத்தரவிட்டது கழக அரசுதான்!

வெள்ளைக்கார ஆஷ் துரையைச் சுட்டுக்கொன்ற வாஞ்சிநாதன் குடும்பத்திற்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் நிதியுதவி தர உத்தரவிட்டார்!

வெள்ளையருக்கு எதிராக அந்தக் காலத்து நாடக மேடையில் 'கொக்கு பறக்குதடி — வெள்ளைக்கொக்கு பறக்குதடி' என்று வீர முழக்கமிட்டவர் விசுவநாததாஸ்; காங்கிரசுக்காரர்கள் அவரது பெயரைச் சொல்லி நீங்கள் கேட்டிருக்கமாட்டீர்கள்; அந்தக் காலத்தில் வீர முழக்கமிட்ட அவரது குடும்பத்துக்கு உதவித் தொகை அளிக்கவேண்டும் — என்று மருத்துவர் மாநாட்டில் தீர்மானம் போட்டு என்னிடம் தந்தார்கள்; நான் அவர்களுக்கு வாக்குறுதி அளித்தேன்; அதன்படி, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டனர்; அந்தத் தியாகியின் குடும்பத்தைச் சார்ந்த நான்கு பேருக்கு உதவி நிதி தர உத்தரவிட்ட அரசு தி. மு. கழக அரசு!

வெள்ளி விழாவில் தாமிரப் பத்திரம் டில்லியில் பெற 50 தியாகிகளை அனுப்புமாறு மத்திய அரசு நம்மைக் கேட்டுக்கொண்டது; அதன்படி பட்டியல் தயாரித்தோம்; அதில் பல பேர் விடுபட்டுவிட்டதாக இங்கே இருப்பவர்கள் கூறினார்கள்; மேலும் 26 பேரைச் சேர்த்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டது; 'மேலும் ஐந்து பேரைச் சேர்க்கவேண்டும்' என்று கூறினார்கள்; அந்த ஐந்துபேரும் சேர்க்கப்பட்டனர்.

இங்கிருந்து அனுப்பப்பட்ட தியாகிகளில் பலர், இன்னும் எங்களைத் தாக்குகின்றவர்கள் இருக்கிறார்கள்!

தஞ்சை மாவட்டத்தில் நாச்சியார்கோயிலைச் சார்ந்த சுப்பையா என்பவரும் டில்லிக்கு அனுப்பப்பட்டவர்தான்; ஆனால் இன்றைக்கும் அவர், தி. மு. கழகத்தை — எங்களைச் சாடி வருபவர்தான்!

'தினமணி' உதவி ஆசிரியர் இராமரத்தினம் என்பவர்கூட டில்லிக்கு அனுப்பப்பட்டவர்தான்!

இவ்விதம் பாரபட்சம் இல்லாமல் — எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் இல்லாமல், 'தியாகிகள் மதிக்கப்பட வேண்டும்' என்ற நோக்கத்துடன் நடந்துகொண்டது இந்த அரசு.

இதே சிதம்பரத்தைச் சார்ந்த நைனியப்ப பிள்ளை எனும் தியாகிக்கு, 'மாத உதவி தர வேண்டும்' என்ற கோரிக்கையை ஏற்று உத்தரவிட்டது இந்த அரசுதான்!

தியாகிகள் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றபோது நானும் — நாவலரும் — அமைச்சர் இராசாராமும் இரயிலடிக்குச் சென்று தியாகிகளுக்குப் பிடித்தமான கதராடையை அணிவித்து வழியனுப்பினோம்!

அவர்கள் டில்லியிலிருந்து திரும்பி வந்தபோது, சென்னையில் விருந்து அளித்துப் பாராட்டினோம்; அந்த விழாவிலேகூட, 'மண்ணைக் காக்கப் போரிட்ட மறவர்குல மாணிக்கங்களே — உங்கள் பொன்னடிகளுக்கு என் தலை தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன்' என்று கூறினேன்.

டில்லிக்குச் சென்ற தமிழகத்துத் தியாகிகள், அங்கு, 'எங்கள் முதல்வர் இரயிலடிக்கு வந்து எங்களை வழியனுப்பி வைத்தார்' என்று கூறியிருக்கிறார்கள்; 'தியாகிகளை மதித்து

(4-ம் பக்கம் பார்க்க)

கழக அரசு சாதனை:

நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் புரட்சிகரமான மாறுதல்கள்

புது சட்டத்தின் மூலம் விதிவிலக்குகள் ரத்து

சட்டப் பேரவையில் திருத்த மசோதா — அமைச்சர் ப. உ. சண்முகம் விளக்கம்

சென்னை, ஆக. 20—

தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உச்சவரம்பு நிர்ணய) 4-வது திருத்த மசோதா, சட்டப் பேரவையில் நிறைவேறியது; இந்த மசோதாவின்படி ஐந்து பேருக்கு மேற்பட்ட ஒரு குடும்பம் வைத்துக் கொள்ளக்கூடிய நில உச்சவரம்பு 40 ஏக்கரிலிருந்து 30 ஏக்கராகக் குறையும்; 1972 மார்ச் முதல் நாளிலிருந்து இது செயலுக்கு வரும்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் புரட்சிகரமான மாறுதல்களாக — இதுவரையில் மேய்ச்சல் நிலங்கட்கும், பால்பண்ணைகட்கும் நிலவுடைமை உச்சவரம்பு பற்றிய முன்னைய சட்டத்தில் அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குகள் — இந்தப் புதிய சட்டத்தின் மூலம் — ரத்து செய்யப்படுகிறது.

இது ரத்து செய்யப்படுவதையொட்டி, அதற்கென்று நியமிக்கப்பட்ட நிலக் குழுவின் பணி மாற்றம் அடைகிறது; மலைத் தோட்டங்களுக்கிடையே அல்லது அவற்றை ஒட்டியுள்ள நிலங்களுக்கு (சட்டத்தின் 31-வது பிரிவின்படி) அனுமதி வழங்குவது மட்டுமே இனி மேற்கண்ட நிலக் குழுவின் பணியாக இருக்கும்.

ஒருவருடைய நிலங்கள் அனைத்தும் சரிவரச் சான்றேட்டில் அல்லது பதிவுப் புத்தகத்தில் குறிக்காமல் விட்டுப்போயிருந்தால், விடுபட்ட நிலங்களைச் சம்பந்தப்பட்ட அதிகாரி சேர்த்துக்கொள்ளவும் இம்மசோதாவில் ஒரு பிரிவு புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்த மசோதாமீது கம்யூனிஸ்டு உறுப்பினர் என். கே. பழனிச்சாமி பேசுகையில், "5 பேருக்கு மேற்பட்ட ஒரு குடும்பத்தினருக்கு நில உச்சவரம்பை மேலும் குறைக்க வேண்டும்; இது குறித்துப் பரிசீலிக்க மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு விட வேண்டும்' என்றார்.

வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் இந்த யோசனையை எதிர்த்தார்; 'பண்ணை நிலங்கள் — மேய்ச்சல் நிலங்கள் ஆகியவை இந்தச் சட்டத்தின்கீழ் தாராளமாக நிலமற்ற ஏழை விவசாயிகட்குக் கிடைக்க இருப்பதால், பொறுக்குக் குழுவிற்கு இந்த மசோதா விடப்படுவதன் மூலம் அது கிடைப்பது தாமதப்படும்' என்று சுட்டிக்காட்டினர்.

"மத்திய நிலச் சீர்திருத்தக் குழு — மத்திய அரசு கூட்டிய முதலமைச்சர்கள் மாநாடு ஆகியவற்றில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கேற்பத்தான் குடும்பத்திற்கான நில உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது; தமிழ்நாட்டில் ஸ்டாண்டர்டு ஏக்கர் நிர்ணயிக்கும் முறை விஞ்ஞான ரீதியில் அமைந்திருப்பது பாராட்டப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

'20 ஸ்டாண்டர்டு ஏக்கராக வரம்பைக் குறைக்க வேண்டும்' என்று பழனிச்சாமி ஒரு திருத்தம் கொண்டுவந்தார்; இந்தத் திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

அறக்கட்டளைகட்கு அளிக்கப்படும் விதிவிலக்கு நிரந்தரமானதன்று — காலப்போக்கில் மாற்றப்பட்டுவிடும்

கல்லூரிகள், மதச் சார்புடைய நிறுவனங்கள் (டிரஸ்டுகள்) எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம் என்று வரம்பு விதிக்கும் இன்னொரு சட்டமும் (நிலச் சீர்திருத்த 3-வது திருத்தச் சட்டம்) சட்டப் பேரவையில் நிறைவேறியது.

"மதம் சம்பந்தப்பட்ட அறக் கட்டளைகளுக்கு (டிரஸ்டுகளுக்கு) நில உச்சவரம்புச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளித்து இப்பொழுது அரசு இயற்றும் சட்டம் நிரந்தரமானது அல்ல; காலப் போக்கில் மாற்றப்பட்டுவிடும்" என்று அமைச்சர் ப. உ. சண்முகம் அறிவித்தார்.

முக்கிய அம்சங்கள்

கூட்டுக் ஆய்வுக் குழுவின் பரிந்துரையின்படி உருவாகயுள்ள இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்களாவன:—

அரசாங்க அங்கீகாரம்பெற்ற கல்லூரிகள், 40 ஸ்டாண்டர்டு ஏக்கருக்குமேல் நிலம் வைத்துக் கொள்ளக்கூடாது.

உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் 20 ஸ்டாண்டர்டு ஏக்கரும், உயர் தொடக்கப் பள்ளிகள்—தொடக்கப்பள்ளிகள் 10 ஸ்டாண்டர்டு ஏக்கரும் பாலிடெக்னிக் — வேளாண்மைப் பள்ளிக்கூடங்கள் — விடுதிகள் — அனாதை இல்லங்கள் 22 ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு மேல் வைத்துக்கொள்ளக் கூடாது.

மதச்சார்புடைய நிறுவனங்களுக்கும், மத சார்புடைய 'டிரஸ்டு'களுக்கும் (அறக்கட்டளைகள்) இந்த உச்சவரம்பிலிருந்துவிலக்கு அளிக்கப்படுகிறது; கடந்த மார்ச் 1-ந் தேதியன்று இயங்கிக் கொண்டு இருந்த நிறுவனங்களுக்கும் — 'டிரஸ்டு'களுக்கும் மட்டும்தான் இந்தச் சலுகையாகும்; இந்த நிறுவனங்களும், மார்ச் 1-ந் தேதிக்கு பிறகு புதிதாக நிலம் வாங்கியிருந்தால், அதற்கு அனுமதி இல்லை.

வள்ளல் தன்மையுடன் அமைக்கப்பட்ட இதர 'டிரஸ்டு'கள், 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் நிலம் தான் வைத்துக்கொள்ளலாம்."

கம்யூனிஸ்டு உறுப்பினரின் திருத்தம் நிராகரிப்பு

"கூட்டு ஆய்வுக் குழுவின் சிபாரிசுகளுக்கு இணங்க மாற்றப்பட்ட இம்மசோதா இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, 'கல்வி நிலையங்களுக்கு விலைநிலங்கள் அளிப்பதை ரத்துச் செய்துவிட வேண்டும்' என்று என்.கே. பழனிசாமி (சம்) கொண்டுவந்த திருத்தம் நிராகரிக்கப்பட்டது.

அமைச்சர் விளக்கம்

திருத்த மசோதாமீது நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் கூறியதாவது:—

"நில உச்சவரம்பு சம்பந்தமான இந்த நடவடிக்கையைத் தமிழ்நாடு அரசுமேற்கொண்டு நிறைவேற்றிய வேகமே, தி. மு. கழக அரசுக்கு நிலச் சீர்திருத்தத்தில் உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தும்.

இந்த அரசு நில உச்சவரம்பை 60 ஸ்டாண்டர்டு ஏக்கரிலிருந்து 30 ஸ்டாண்டர்டு ஏக்கராகக் குறைத்துள்ளது; இது இந்த அரசின் முற்போக்கு நிறைந்த நடவடிக்கையாகும்.

'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்பது தி. மு. கழகத்தின் லட்சியமாகும்; இந்த இலட்சியம் சட்டம் கட்டமாகத்தான் நிறைவேற்றப்படும்.

அறக்கட்டளைக்கு உள்ள நிலத்தை எடுப்பதா இல்லையா என்பதுதான் பிரச்சினையே தவிர அவை நிலங்கள் பற்றிப் பிரச்சினை அல்ல; இது குறித்துச் சட்டம் இயற்றப்பட்டுப் பொறுக்குக் குழுவுக்கும் அது விடப்பட்டு — இது குறித்துக்கருத்தறிய மாவட்டங்தோறும் குழுவினர் சென்று வந்து கருத்துத் தெரிவித்த பின்னர்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மடாதிபதிகளைக் கண்டு பயப்படுவதாகச் சொல்வது சரியல்ல; சாட்சிகளை எல்லாம் விசாரித்துத்தான் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இந்த நிலங்களை எடுத்துக்கொள்வதால் அறநிலையங்களால் நடத்தப்படும் கல்லூரிகள் — பாடசாலைகள் எல்லாம் கெட்டுவிடும் — என்றார்கள்; இவற்றையெல்லாம் ஆலோசித்துத்தான் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

ஆலயங்களுக்குச் சொந்தமான அறக் கட்டளைகளுக்குத்தான் விதிவிலக்குத் தந்திருக்கிறோம்; மத சம்பந்தப்பட்ட அறநிலையங்களின் விதிவிலக்குகளை ரத்து செய்ய சிறிதுகாலமாகும்.

எங்களுக்கு ஆலயங்கள் மீதும், மதங்கள் மீதும் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ—நம்பிக்கை வைத்திருப்பவர்களின் மனம் புண்படாமல் அவர்களைப் பண்படுத்திய பின்னர்தான் இதன்மீது நடவடிக்கை எடுக்க இயலும்.

அறக் கட்டளைகளைப் பொறுத்தமட்டில் எவ்வளவு தூரம் தலையிட்டுச் செய்யமுடியுமோ அவ்வளவு செய்திருக்கிறோம்.

'கல்லூரிகளுக்கு ஏன் அதிக நிலம் — அதைக் குறைக்க வேண்டுமென்று தங்கமணி கூறினார்; கே. எம். சுப்பிரமணியமோ, 'கல்லூரிகளுக்கு அதிக நிலம் வேண்டும்' என்று தெரிவித்தார்.

கல்லூரி — பாடசாலைகள் சிறப்பாகச் செயல்படுவதற்குத் தேவைப்படும் அளவுக்கு நிலம் கொடுப்பது அவசியமெனக் கருதுகிறோம்.

இந்தச் சட்டம் அனைவராலும் வரவேற்கக்கூடியது; யாருக்கும் பயந்துகொண்டு இதைக் கொண்டுவரவில்லை; காலப் போக்கில் இந்தச் சட்டம் திருத்தப்படும்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தை இந்த அரசு வேகமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது; சட்டம் கொண்டு வருவதிலும் — அவற்றை நிறைவேற்றுவதிலும் வேகமாகச் செயல்பட்டு வருகிறோம்.

இப்படிப்பட்ட சட்டத்தைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புவதன் மூலம் காலதாமதமாகும். விதிவிலக்குகள் ரத்து செய்யப்படுவதால் நிலமற்ற ஏழைகளுக்கு அவைகள் கிடைக்கும்.

சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் — 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றிருந்ததை, 30 ஸ்டாண்டர்டு என்று ஆக்கியிருக்கிறோம்.

10—15 என்பது, இப்போது இருபோக நிலமாக இருக்கலாம் — என்று தெரிவிக்கப்பட்டது; மோசமான பூமியானால் 45 ஏக்கர் வரை இருக்கலாம் — என்று குழு அறிவித்திருக்கிறது.

15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று உச்சவரம்பு வைத்திருக்கிறோம்; இப்படி நாம் விஞ்ஞான ரீதியில் நிர்ணயித்திருக்கிறோம்.

ஏக்கருக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று பார்த்து நிலத்தைத் தரம் பிரித்தும் நிர்ணயித்திருக்கிறோம்.

நிலப் பிரபுகளுக்குப் பயந்து கொண்டோ — அல்லது அவர்களுக்குச் சாதகமாகவோ — பாதுகாப்புத் தரவேண்டும் என்ற எண்ணமோ இந்த அரசுக்கு இல்லை.

ஏற்கனவே இருந்த உச்சவரம்புகளைக் குறைத்ததன் மூலம் எந்தச் சாராருக்கும் பயப்படாமல் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறோம் என்பது புரியும்."

உழுபவருக்கே நிலத்தைச் சொந்தமாக்கும் முயற்சி

முன்னேற்பாடாக சாகுபடியாளரைப் பாதுகாக்கச் சட்டம்

சட்டப் பேரவையில் அமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 20—

1972-ம் ஆண்டு கூடுதல் நிலவரி—கூடுதல் தண்ணீர் தீர்வை (இரண்டாம் திருத்த) மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

பட்டா நிலத்திற்கு அரசாங்கம் தண்ணீர் கொடுத்தால் எவ்வளவு கூடுதல் தீர்வை விதிக்கப்படுகிறதோ அதே கூடுதல் தீர்வையைப் புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்கின்றவர்களுக்கும் விதிக்க இந்த மசோதா வகைசெய்கிறது.

இதன்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் கூறியதாவது:—

"இத்தீர்வையின் மூலம் கோடிக் கணக்கில் பணம் திரட்டுவது அரசின் நோக்கமல்ல; பட்டா நிலத்திற்கு அரசாங்கம் தண்ணீர் வழங்கினால் எவ்வளவு கூடுதல் தீர்வை வழங்கப்படுகிறதோ அதே அளவுக்குப் புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்கின்றவர்களுக்கும் விதிக்கப்பட வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும்.

பட்டா நிலங்களுக்கு அதிகபட்சமாகத் தண்டத்தீர்வை விதிக்கப்படுகிறது; அதையொட்டித்தான் இந்தத் தீர்வை விதிக்கப்படும்; இதனால் அதிகபட்சம் ரூ. 26.25 மட்டுமேதான் கொடுக்க வேண்டியிருக்கும்.

புறம்போக்கு நிலத்தில் அரசாங்கத் தண்ணீரைப் பயன்படுத்துகிறவர்களுக்குத்தான் இந்தத் தீர்வை விதிக்கப்படும்; இது தண்டத் தீர்வை ஆகாது; தண்டத் தீர்வைக்கும் — கூடுதல் வரிக்கும் தொடர்பு இல்லை.

புறம்போக்கு நிலங்களைப் பட்டா செய்து கொடுப்பதில் அரசு தீவிரம் காட்டி வருகிறது; சென்ற ஆண்டில் 1.25 இலட்சம் ஏக்கர் நிலம் பட்டா செய்துகொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதுவரையில் தி. மு. கழக அரசு 5 இலட்சம் ஏக்கர் புறம்போக்கு நிலத்தைப் பட்டா செய்து கொடுத்திருக்கிறது."

அண்ணா சிலைக்கு அருகில் பல மாடிக் கட்டடம்

சென்னை, ஆக. 19—

"சென்னையில் அண்ணா சிலைக்குப் பின்புறமாகப் பல மாடிக் கட்டடம் ஒன்று கட்டும் திட்டம் அரசின் பரிசீலனைகளில் இருக்கிறது"

என்று, சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் எஸ். ஜெ. சாதிக் பாட்சா தெரிவித்தார்.

சாகுபடியாளர் பாதுகாப்பு: கன்யாகுமரிக்கு விரிவு

1972-ம் ஆண்டு பயிரிடும் சாகுபடியாளர் பாதுகாப்பு — நியாய வாரம் கொடுத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவு) மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

ரயத்துவாரி முறை கன்னியாகுமரி மாவட்டத்திற்குக் கொண்டு வரப்படுவதால், சாகுபடியாளர்களை நிலத்திலிருந்து நியாயமற்ற முறையில் வெளியேற்றுவதைத் தடுக்கவும், நியாய வாரம் ஆகிய வசதிகளை அளிக்கவும் இந்த மசோதா வகை செய்கிறது.

இதன்மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் வருவாய்த்துறை அமைச்சர் ப. உ. சண்முகம் கூறியதாவது:—

"இடைத் தரகர்களை அடியோடு நீக்கிவிட்டுச் சாகுபடியாளர்களுக்கே நிலத்தை உரிமையாக்க வேண்டும் என்பது அரசின் நோக்கமாகும்; இதற்கிடையே சாகுபடியாளர்களைப் பாதுகாக்க நிறைய ஏற்பாடுகள் இருக்கின்றன.

சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சாகுபடி செய்யும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புத் திருத்த மசோதாவுக்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துவிட்டதால், பணம் கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக நிலத்திலிருந்து சாகுபடியாளர்களைவெளியேற்ற முடியாது."

மக்கட்தொகை பெருகிய தமிழக நகரங்கள்

பத்தாண்டில் எண்ணிக்கை அதிகரிப்பு

சென்னை, ஆக. 20—

1971 மக்கட்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டில் முதல் தடவையாக 14 நகரங்கள் 50,000 மக்கட்தொகையைத் தாண்டியிருக்கின்றன; அவை — திருவொற்றியூர், ஆவடி, தாம்பரம், பல்லாவரம், திருவண்ணாமலை, ஆம்பூர், வாணியம்பாடி, விழுப்புரம், நெய்வேலி, சிங்காநல்லூர், திருவரங்கம், காரைக்குடி, கடையநல்லூர் ஆகியவைகளாகும்.

"50,000 மக்கட்தொகைக்குச் சற்றுக் குறைவாயுள்ள காரணத்தால் சில நகர்களை இந்த வரிசையில் சேர்க்க முடியவில்லை"

என்று மக்கட்தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர் திரு. கே. சொக்கலிங்கம் கூறினர்; உதாரணமாக 'பழனியின் மக்கட் தொகை 49,575; அதைச் சேர்க்க முடியவில்லை' என்றார்.

"எனினும், திட்டக் குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளமக்கட்தொகை பற்றிய நிபுணர் குழு குறிப்பிட்ட பகுதிகளில் சராசரி ஆண்டு மக்கட்தொகை வளர்ச்சி அடிப்படையில் அவ்வப்போது நிலைமையை ஆராய்ந்து வருகிறது; எனவே, 50,000 மக்கட்தொகை எல்லையில் உள்ள நகர்களும் சேரக்கூடிய வாய்ப்பு உள்ளது" என்று திரு. சொக்கலிங்கம் கூறினர்.

மாநிலத்தில் இப்போது 50,000 மக்கட்தொகைக்கு மேற்பட்ட 48 நகரங்கள் உள்ளன; 1961-ல் 25 நகர்களே அப்படியிருந்தன; இப்போது ஓர் இலட்சம் முதல் 2 இலட்சம் மக்கட்தொகை உள்ள 12 நகர்கள் உள்ளன; 1961-ல் இப்படி 9 நகர்கள் இருந்தன.

முக்கிய நகர்களில் தற்போதைய மக்கட்தொகை விவரம் கீழே தரப்படுகிறது; அடைப்புக்குள் உள்ளது 1961-ஆம் ஆண்டைய கணக்காகும்:—

சென்னை	24,69,449	(17,29,141)
மதுரை	5,49 114	(4,24,810)
கோவை	3,56 368	(2,86,305)
சேலம்	3 08,716	(2.49 145)
திருச்சி	3,07,400	(2,49,862)

கோவை மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூரில் மக்கட்தொகை ஐந்து மடங்கு பெருகியுள்ளது; 1961-ல் அதன் மக்கட்தொகை 26,674-தான்; அது இப்போது 1,12,206 ஆகியுள்ளது.

அதே மாதிரி ஆவடியிலும் 13,050-லிருந்து 77,413 ஆகியிருக்கிறது.

நெய்வேலி டவுன் ஷிப்பில் 10,296-லிருந்து 58,285-ஆக மக்கட்தொகை பெருகியிருக்கிறது.

தர்மபுரி மாவட்டத்தில்தான் 50,000 மக்கட்தொகைக்கு மேற்பட்ட நகர் ஒன்றுகூட இல்லை.

வசூலாகாமல் உள்ள வருமான வரி பாக்கி

ரூ. 438 கோடி என்கிறார் மத்திய இணை அமைச்சர்

புதுடில்லி, ஆக. 19—

"1972-ம் ஆண்டு மார்ச் 31-ந் தேதிய கணக்குப்படி, மத்திய அரசுக்கு வசூலாகாமல் பாக்கியாக உள்ள வருமான வரியின் மதிப்பு ரூ. 438 கோடியாகும்"

என்று மக்களவையில், நிதித்துறை இணை அமைச்சர் கே. ஆர். கணேஷ் தெரிவித்தார்; இததொடர்பில் மேலும் அவர் கூறியதாவது:—

"சொத்து வரி ரூ 16 கோடிக்கும் நன்கொடை வரி ரூ. 2 50 கோடிக்கும், எஸ்டேட் வரி ரூ 13.75 கோடிக்கும் பாக்கியிருக்கிறது.

வரி பாக்கி என்பது கடுமையான பிரச்சினைதான்; ஆனால் தீர்க்க முடியாத பிரச்சினை அல்ல; மத்திய அரசு கடுமையான நடவடிக்கை எடுத்து, வரி பாக்கிகளை வசூலிக்கும்.

கடந்த 20 ஆண்டுகளில் மத்திய அரசு வசூலித்துள்ள வருமான வரி ரூ. 9,694 கோடியாகும்; அதாவது, மொத்த வருமான வரியில் ஐந்தில் 4 பங்கு வசூலாகிவிட்டது; ஐந்தில் ஒரு பங்குதான் வசூலாகாமல் கிடக்கிறது."

தாழ்த்தப்பட்டவர்கட்கும் கோவில் நிர்வாகத்தில் பங்கு

அறங்காவலர் குழுவில் இடமளிப்பதைக் கட்டாயமாக்கச் சட்டம்

தமிழகச் சட்டப் பேரவையில் நிறைவேற்றம் — அமைச்சர் மு. கண்ணப்பன் விளக்கம்

சென்னை, ஆக. 21—

1972-ம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளை (திருத்த) மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது.

ஆண்டுதோறும் ரூ. 20,000 வருவாயுள்ள சமய நிறுவனங்கள், பட்டியலில் சேர்க்கப்பட்ட நிறுவனங்களாகும்; இத்தகைய நிறுவனங்களில் பரம்பரை அறங்காவலர்கள் (டிரஸ்டிகள்) இல்லை என்றால், இந்து அறநிலைய ஆணையர் தமக்குள்ள அதிகாரத்தின் கீழ் மூன்று பேருக்குக் குறையாமலும் — ஐந்து பேருக்கு மேற்படாமலும் அறங்காவலர் குழுவை அமைக்கலாம்; அவ்வாறு அமைக்கும்போது தாழ்த்தப்பட்ட அல்லது பழங்குடியைச் சேர்ந்த ஒருவரை நியமிக்க இந்த மசோதா வகை செய்கிறது.

பொதுவாக எல்லாக் கட்சியினரும் மசோதாவை ஆதரித்துப் பேசினர்; 'அறங்காவலர்களில் பெண்களையும் நியமிக்க வேண்டும்' என்றும், 'தாழ்த்தப்பட்டவர்களை அறங்காவலர்களாக நியமிக்கும்போது தகுதி அடிப்படை எதையும் பார்க்கத் தேவையில்லை' என்றும் கருத்துத் தெரிவித்தனர்.

அமைச்சர் பதில்

விவாதத்திற்குப் பதிலளிக்கையில், அமைச்சர் மு. கண்ணப்பன் அவர்கள் கூறியதாவது:—

"தாழ்த்தப்பட்டவர்களை மற்ற சமுதாயத்தினரும் மதிக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது; 'சட்டம் இல்லாமலேயே இதைச் செய்யக்கூடாதா' என்று கேட்கலாம்; நிரந்தரமான பாதுகாப்பு வேண்டும் என்பதற்காகவே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

காங்கிரசு ஆட்சிக் காலத்தில் 227 தாழ்த்தப்பட்டவர்களை அறங்காவலர் குழுவில் உறுப்பினர்களாக நியமித்தார்கள்: கழக ஆட்சிக் காலத்தில் 491 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

'பரம்பரை அறங்காவலர்களை; ஒழித்துவிட்டு நிர்வாகத்தைச் சீர்திருத்த வேண்டும்' என்று குறிப்பிட்டார்கள்; இதுபற்றி அரசாங்கம் பரிசிலனை செய்து வருகிறது.

கோவில்களில் வரும் பணத்தை வேறு துறைகளுக்குச் செலவிடுவதாகக் குறை கூறினர்கள்; இந்து மதத்தைப் பரப்பும் வகையில்தான் இந்தப் பணம் செலவிடப்படுகிறது; கல்லூரிகள் — மருத்துவமனைகள் கட்டுதல் — பிச்சைக்காரர் மறுவாழ்வு—கண் இழந்தோருக்குக் கண் பார்வை வழங்குதல் போன்ற திட்டங்களுக்கு கோவில் பணம் செலவிடப்படுகிறது; இவைகள் மிக நல்ல திட்டங்கள்; இதை நீங்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், ஆண்டவன் ஒப்புக் கொள்கிறார்."

பொருளாளர் எம். ஜி. ஆர்.

புதிய அஞ்சல் முகவரி

கழகப் பொருளாளர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் முகவரிக்குக் கடிதம் எழுதுபவர்கள், தற்போது அஞ்சல் துறையினர் புதியதாக மாற்றியுள்ள சென்னை நகர அஞ்சல் பிரிவு என்ற 89-க்கு — அதாவது, 'திரு. எம்.ஜி. இராமச்சந்திரன், சட்டமன்ற உறுப்பினர், எம். ஜி. ஆர். தோட்டம், இராமபுரம், சென்னை-89' என்ற முகவரிக்கு எழுதித் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.



பருப்பு வகைகளின் விலை உயர்வுக்குக் காரணம்?

அமைச்சர் ப. உ. சண்முகம் விளக்கம்

சென்னை, ஆக. 19—

சட்டப் பேரவையில், பருப்பு வகைகளின் விலைகள் பற்றிக் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் பதிலளிக்கையில், 'துவரம் பருப்பு, பச்சைப் பருப்பு (பயத்தம் பருப்பு) — உளுத்தம் பருப்பு — கடலைப் பருப்பு ஆகியவற்றின் விலை 1971-ம் ஆண்டு மே மாதத்திலிருந்து ஓராண்டுக் காலத்திற்குள் இருபது சதவிகிதம் உயர்ந்துள்ளது' என்றார்.

"பிற மாநிலங்களில் பருப்பு உற்பத்தி குறைந்து — அதன் காரணமாக நமது மாநிலத்திற்கு வரும் பருப்பு வகைகளின் அளவு குறைந்ததாலும், போக்குவரத்து இடர்ப்பாடுகள் காரணமாகவும் விலைகள் உயர்ந்தன" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

துணைக் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"இந்திய உணவுக் கார்ப்பரேஷனிடம் பருப்பு வகைகளைத் தருவித்து மாநில அரசுக்குத் தரும்படி கேட்டிருக்கிறோம்; அப்படிக் கிடைத்தால் அவற்றை நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

பருப்பு வகைகள் வெளி மாநிலங்களிலிருந்து வரவேண்டியிருப்பதால், இவற்றை உணவுக் கார்ப்பரேஷன் மூலம் தருவித்துத் தரும்படி கேட்டிருக்கிறோம்."

5,35,000 ஏக்கர் நிலத்தில் கூடுதலாகப் பருப்பு சாகுபடி

மற்றொரு துணைக் கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்நாட்டில கடந்த ஆண்டில் எட்டரை இலட்சம் ஏக்கர் நிலத்தில் பருப்பு வகைகள் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது; நடப்பு ஆண்டில் கூடுதலாக 5 35.000 ஏக்கர் நிலத்தில் பருப்பு சாகுபடி செய்யப்படும்."

பிணி நீக்கும் பணிக்கு ஆலய நிதி

இருபது இடங்களில் இயங்கும் மருத்துவமனைகள்

சட்டப் பேரவையில் அமைச்சர் மு. கண்ணப்பன் தகவல்

சென்னை, ஆக. 17—

"தமிழக அறநிலையத் துறையின் சார்பில் இருபது இடங்களில மருத்துவமனைகள் நடத்தப்பட்டு வருகிறது; மேலும் 10 அல்லது 15 இடங்களில் ஆலய உபரி நிதியிலிருந்து மருத்துவமனைகள் திறக்க முயற்சி நடைபெற்றுவருகிறது"

என்று சட்டப் பேரவையில் அறநிலைய அமைச்சர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள், என். கிட்டப்பாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

ஆலய உபரி நிதியிலிருந்து நடைபெற்றுவரும் மருத்துவமனைகள் விவரம் வருமாறு:—

தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தானம், பழனி.

இராமநாத சுவாமி தேவஸ்தானம், இராமேசுவரம்.

மாரியம்மன் ஆலயம், இருக்கன்குடி, இராமநாதபுர மாவட்டம்.

பூமிநாத சுவாமி, சிருகாலசாந்தி முதலிய சட்டளை, வீரவநல்லூர்— திருநெல்வேலி மாவட்டம்.

பிள்ளையன் கட்டளை, திருநெல்வேலி.

திருமலை குமரசுவாமி ஆலயம், பன்பொழி, தென்காசி வட்டம்.

அக்கினீசுவர சுவாமி ஆலயம், வைத்தீசுவரன் கோயில், தஞ்சாவூர் மாவட்டம்.

சுவாமிநாத சுவாமி ஆலயம், சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம்.

மாரியம்மன் ஆலயம், சமயபுரம், திருச்சி மாவட்டம்.

ஜௌளஞ்சியப்பர் ஆலயம், மணவாளநல்லூர், தென் ஆற்காடு மாவட்டம்.

பெண்ணுரி மாரியம்மன் ஆலயம், இராசன் நகர், கோயமுத்தூர் மாவட்டம்.

சிவகங்கை தேவஸ்தானம், சிவகங்கை, இராமநாதபுர மாவட்டம்.

சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர்.

வேதாரண்யேசுவரர் கோயில், வேதாரண்யம், திருத்துறைப்பூண்டி வட்டம்.

அரண்மனை தேவஸ்தானங்கள், தஞ்சாவூர் நகர்.

மந்திரபுரீசுவரர் கோயில், கோவிலூர், திருத்துறைப்பூண்டி வட்டம்.

கோபிநாத சுவாமி கோயில், ரெட்டியார் சத்திரம், திண்டுக்கல் வட்டம்.

காளஹஸ்தீசுவரர் கோயில், திண்டுக்கல் வட்டம்.

தண்டாயுதபாணி சுவாமி ஆங்கில முறை மருத்துவமனை, பழனி.

டி. என். அனந்தநாயகி:— "கோவில்களில் கிடைக்கும் வருமானத்தை, சீரற்ற கோவில்களைப் புதுப்பிக்க முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா அல்லது இதுபோன்ற வேறு அறப்பணிகளுக்கு — மருத்துவமனைகள் அமைப்பது போன்றவற்றுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறதா?"

மு. கண்ணப்பன்:— "கோவில் திருப்பணிகளுக்குச் செலவிட்டதுபோக மீதியுள்ள பணத்தில் தான் இதுபோன்ற பணிகள் நடக்கின்றன."

சுரண்டல் இப்போது இல்லை!

கோவை செழியன்:— "சில கோவில்களில் கோவில் சிலையையே சுரண்டி மருந்தாக்குவதாக — அதாவது பழனியிலுள்ள கோவில் சிலை நவ பாஷாணத்தால் செய்யப்பட்டதாகக் கூறப்படுவதால் அதனைச் சுரண்டிச் சுரண்டி மருந்து செய்வதாக — பேசப்படுகிறது; அதுபோன்ற காரியங்களைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?"

அமைச்சர்:— "சுரண்டுகின்ற வேலை தற்போது இல்லை."

காமாட்சி:— "கோவில் வருமானத்தால் அமைக்கப்பட்டுள்ள மருத்துவமனைகளில், படுக்கை வசதியுள்ள மருத்துவமனைகள் எத்தனை?"

அமைச்சர்:— "சமயபுரத்தில் மருத்துவமனையை விரிவுபடுத்தும் யோசனை உள்ளது; தற்போது பழனியில் மட்டும்தான் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை உள்ளது; மற்றவை அனைத்தும் சித்த வைத்திய மருத்துவமனைகளாகவே இருக்கின்றன; 14—2—72 அன்று பழனியில் 20 படுக்கைகள்கொண்ட மருத்துவமனையை முதலமைச்சர் கலைஞர் தொடங்கிவைத்தார்; அங்கு ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டர் நியமிக்கப்பட்டுள்ளார்."

ஏ.எம். இராசா:— "பல கோவில்களில் நல்ல வருமானம் வருகிறது; குறிப்பாகக் கோவை மாவட்டத்தில் உள்ள மருதமலை கோவிலில் நல்ல வருமானம் வருவதாகச் சொல்கிறார்கள்; அங்கு ஒரு மருத்துவமனை அமைக்கப்படுமா?"

அமைச்சர்:— "உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும்."

கே. எம். சுப்பிரமணியம் (ஸ்தாபனக் காங்கிரசு):— "மடாதிபதிகள் சார்பில் இதுபோன்ற மருத்துவமனைகள் நடத்தப்படுகின்றனவா? இல்லாவிட்டால், அரசு அவர்களை இப்படி மருத்துவமனைகள் அமைக்கும்படி வலியுறுத்துமா?"

அமைச்சர்:— "இதுபற்றி எனக்குத் தகவல் ஏதுமில்லை; இதற்குத் தனிக் கேள்வி போடவும்."

பிணியை நீக்கப் பிரார்த்தனை?

டி. என். அனந்தநாயகி:— "வெளிநாடுகளில், 'நோய்களைப் பிரார்த்தனை மூலமே குணப்படுத்தலாம்' என்று அண்மையில் கண்டிருக்கிறார்கள்; அதுபோல் இங்கும் நோய்களைப் பிரார்த்தனை மூலம் குணப்படுத்தலாமே?"

அமைச்சர்:— "அம்மையாருக்கு அதில் நம்பிக்கை இருக்குமானால் அவர்கள் அப்படி நோய்களைக் குணப்படுத்திக் கொள்ளலாம்."

துரை முருகன்:— "விபூதியும் துளசியும் நோய்களைக் குணப்படுத்தும் என்றும் கூறப்படுகிறதே?"

அமைச்சர்:— "துளசியும் திருநீறும் பூசுவதில் அரசுக்கு எந்த வித ஆட்சேபனையும் இல்லை; என்றாலும், 'நோய்களை மருந்துகள் மூலம் குணப்படுத்தலாம்' என்று அரசு இதுபோன்ற பணிகளைச் செய்ய முன்வந்துள்ளது."

கே. டி. கே. தங்கமணி:— "சமயபுரத்தில் மருத்துவமனை விரிவுபடுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்; தேவையானால் இன்னும் விரிவுபடுத்தப்படும் என்றும் தெரிகிறது; இன்னும் எத்தனை இடங்களில் விரிவுபடுத்தப்படும்?"

அமைச்சர்:— "மேலும் 10 — 15 இடங்களில் விரிவுபடுத்தும் எண்ணம் உள்ளது."

மாநில சுயாட்சி

பலன் பற்றி விளக்கத் திரைப்படம் தயாரிப்பு

சட்டப் பேரவையில் கேள்வி — முதலமைச்சர் பதில்

சென்னை, ஆக. 19—

"மாநில சுயாட்சிக் கோரிக்கை; பற்றிப் பிற மாநிலத்தவரும் — வெளிநாட்டவரும் புரிந்துகொள்கின்ற வகையில், தமிழ்நாடு அரசு ஆங்கில ஏடு நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?"

என்று, சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் பி. எஸ். மணியம் வினவினர்.

முதலமைச்சர்:— "இல்லை"

பி.எஸ் மணியம்:— "மாநிலசுயாட்சி பற்றிப் பிரச்சாரம் செய்வதற்காகவும் — அதன் பலன்களை விளக்குவதற்காகவும் அரசு சார்பில் செய்திப் படம் தயாரிக்கும் செயற்குறிப்பு எதுவும் இருக்கிறதா?"

முதலமைச்சர்:— "அரசின் சார்பில் அப்படிச் செய்ய ஒன்றுமில்லை; மாநாடுகள் மூலமும் — நிருபர் கூட்டங்கள் மூலமும் — அரசியல் மேடைகள் மூலமாகவும் மாநில சுயாட்சி பற்றிய கருத்துரைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன; சட்டமன்றக் கூட்டங்களில்கூட அதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு விளக்கப்பட்டிருக்கின்றது."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

23--8--72

சிவகாசி

நகர தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு பாவாடி தோப்புத் திடலில்; தலைவர்: இரா. இராமசாமி; பேசுவோர்: அமைச்சர் க. அன்பழகன், எஸ்.எஸ். தென்னரசு எம்.எல்.சி., சா. காளிமுத்து எம்.எல்.ஏ. மற்றும் கழக முன்னணியினரும்--நகராட்சி தி. மு. கழக உறுப்பினர்களும்.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண் 277/72

நிர்வாக அலுவலர்,
ஸ்ரீ வைகுண்ட பெருமாள் தேவஸ்தானம்,
பெரிய காஞ்சிபுரம், காஞ்சிபுரம் வட்டம்,
செங்கற்பட்டு மாவட்டம் —மனுதாரர்

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டம் பெரிய காஞ்சிபுரம் நகரம் ஸ்ரீ வைகுண்ட பெருமாள் தேவஸ்தானம் விஷயமாக:—

செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரம் வட்டம் பெரிய காஞ்சிபுரம் நகரம் ஸ்ரீ வைகுண்ட பெருமாள் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான சென்னை-1, பிராட்வேயில் 1/156 ல் உள்ள கட்டிடத்தினை அடியில் குறிப்பிட்ட நிபந்தனைகட்கு 10 (பத்து) வருடங்கட்கு சென்னை 1-ல், பிராட்வே 1/156-ல் உள்ள ரவி பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. சி. வெங்கட்டராவ் நாயுடு என்பவருக்கு நீண்டகாலக் குத்தகைக்குவிட அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம (தமிழ் நாடு சட்டம் (22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு:—

நிபந்தனைகள்

1. குத்தகைக் காலம் 10 (பத்து) வருடங்கள்.
2. குத்தகைதாரர் தனது சொந்தச் செலவில் ஏற்கனவேயே அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ. 10 300 (ரூபாய் பத்தாயிரத்து முன்னூறு) செலவில் தற்போதுள்ள கட்டிடத்திற்குப் பழுது பார்த்தல் வேண்டும்.
3. குத்தகைதாரர் மாதம் ரூ. 230 (ரூபாய் இருநூற்று முப்பது) வாடகை செலுத்த வேண்டும்.
4. கட்டிடம் பழுதுபார்த்தல், வேலை இலாகா மேற்பார்வைப் பொறியாளரின் மேற்பார்வையில் நடத்தப்பட வேண்டும்.
5. குத்தகைக் காலாவதியில், கட்டிடத்தை எவ்வித நஷ்ட ஈடும் கோராமல் தேவஸ்தானத்தின் வசம் ஒப்படைத்துவிட வேண்டும்.
6. மதிப்பீட்டின்படி பழுது பார்த்த பிறகும் இப்பொழுது உள்ளது போல் மேற்படி கட்டிடத்தை உள்குத்தகைக்கோ அல்லது வேறு யாருக்கோ குத்தகைக்கு விடக்கூடாது.

நோட்டீஸ் மனு எண் 277/72 டி. 1
நாள் 9—8—1972

மேற்படி மனு குறித்து சென்னை 34, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 23—9—1972 அன்று காலை 11-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்து மூலமாக 20—9—1972 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றினை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக.

உலகம் கண்டிராத சாதனை

10 மணி நேரத்தில் 1,208 கண் அறுவைச் சிகிச்சைகள்

டால்மியாபுரம் இலவச முகாமில் டாக்டர்களின் அரும்பணி

திருச்சி, ஆக. 21—

திருச்சியை அடுத்த டால்மியாபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள இலவசக் கண் சிகிச்சை முகாமில், நேற்று 10 மணி நேரத்தில் 1 208 கண் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன, இவ்வளவு குறுகிய நேரத்தில் -- இத்தனை அறுவைச் சிகிச்சைகள் உலகத்தில் இதுவரையில் எங்குமே செய்யப்பட்டதில்லை என்று கூறப்படுகிறது.

திருச்சியிலிருந்து 20 மைல் தொலைவிலுள்ளது டால்மியாபுரம்; இங்குள்ள டால்மியா சிமெண்டு (பாரத்) லிமிடெட் நிறுவனத்தினர், இலவசக் கண் சிகிச்சை முகாமிற்கு ஏற்பாடு செய்துள்ளனர்.

மதுரையைச் சேர்ந்த கண் டாக்டர் வெங்கடசாமியின் தலைமையில் 16 டாக்டர்கள் இந்த முகாமில் பணியாற்றுகின்றனர்; நேற்று அவர்கள் 10 மணி நேரத்தில் 1,208 அறுவைச் சிகிச்சைகளை செய்து முடித்தனர்.

(இதற்கு முன்பு கோபிசெட்டி பாளையம் இலவசக் கண் சிகிச்சை முகாமில்தான் -- ஒரே நாளில் -- அதிகபட்சமாக 961 அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டன.)

டாக்டர் வெங்கடசாமியையும், மற்ற டாக்டர்களையும் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் டி. பி. பாரதி, டால்மியா சிமெண்டு நிறுவனத்தின் நிர்வாகி பி. வி. இராசு ஆகியோர் பாராட்டினர்.

"டால்மியா சிமெண்டு நிறுவனத்தினரும் -- திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரும் விரிவான ஏற்பாடுகள் செய்து கொடுத்ததாலேயே ஒரே நாளில் இத்தனை அறுவை சிகிச்சைகளைச் செய்ய முடிந்தது"

என்று டாக்டர் வெங்கடசாமி கூறினார்.

"நடப்பு ஆண்டில் இலவசக் கண் சிகிச்சைத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் ஓர் இலட்சம் அறுவைச் சிகிச்சைகளைச் செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கட் பிறப்பு விகிதம்

இந்துச் சமூகத்தில் மட்டும் குறைவதற்குக் காரணம்?

புதுடில்லி, ஆக. 19—

"மக்கள் தொகைப் பிறப்பு விகிதம் மற்றைய பிரிவினரைவிட இந்துக்களிடையே குறைவாக இருக்கிறது"

என்று, நாடாளுமன்ற மேலவையில், துணை அமைச்சர் ஏ. கே. கிஷ்கு தெரிவித்தார்.

அண்மையில் வெளியான மக்கள் தொகைப் புள்ளி விவரப்படி 1961—71-ல் மட்டும் இந்தக் குறைவு ஏற்படவில்லை என்றும் அதற்குமுந்தைய பத்தாண்டுகளில் கூட இந்தச் சமூகத்தில் பிறப்பு விகிதம் குறைவாகவே இருந்து வந்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

"விதவைகள் மறுமணம் செய்யாதிருத்தல் போன்ற இந்து சமூகத்தின் பல கட்டுப்பாடுகளும் பண்பாடுகளுமே இப்படிப் பிறப்பு விகிதம் குறைவதற்குக் காரணமாகும்" என்றும் அமைச்சர் கூறினார்.

தமிழ்நாட்டில் மைக்காச் சுரங்கம்

சென்னை, ஆக. 18—

"நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் தாலுகாவில் சேரன்கோடு -- கோலப்பள்ளி -- சேரன்பாடி -- கூடலூர் வட்டாரங்களில் மைக்கா இருக்கிறது; சேரன்பாடி -- கோலப்பள்ளி ஆகிய கிராமப் பாறைகளில் நல்ல 'ரூபி மைக்கா' காணப்படுகிறது.

"தற்போது பட்னீர் -- இலட்சுமி குமார் -- பவன் குமார் என்ற 3 சுரங்கங்கள்தான் இயங்குகின்றன; இவைகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 75 மெட்ரிக் டன் எடை உள்ள மைக்கா எடுக்கப்படுகிறது"

என்று, தொழிலமைச்சர் செ. மாதவன், சட்டப் பேரவையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

கிராமச் சாலைகளை மேம்படுத்தும் திட்டம்

அரசு ஒப்புதல்

சென்னை, ஆக. 19—

"மத்திய அரசின் மானிய உதவியுடன் 1,500-ம் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் கொண்ட ஊர்களை இணைக்கும் சாலைகளை மேம்படுத்தும் திட்டத்திற்கு மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது"

என்று சட்டப் பேரவையில், கழக உறுப்பினர் என். கிட்டப்பா கேள்விக்குப் பதிலளிக்கையில், உள்ளாட்சித் துறை அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

தனி ஓய்வு ஊதியம்

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"நகராட்சிப் பணியாளர்களுக்கும், மதுரை மாநகராட்சிப் பணியாளர்களுக்கும் அந்தந்த நிறுவனங்களிலிருந்து தனி ஓய்வூதியம் (அட் ஹாக் பென்ஷன்) வழங்கும் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது."

லாரித் தொழில் அரசுடைமை ஆகுமா?

சட்ட மன்றத்தில் அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் பதில்

சென்னை, ஆக. 20—

"பெரிய லாரி கம்பெனிகளை அரசுடைமையாக்கி--அரசே ஏற்று நடத்தும் எண்ணம் இப்போதைக்கு இல்லை"

என்று சட்டப் பேரவையில், கோவை செழியன் (தி.மு.க.) கேள்விக்குப் பதிலளிக்கையில் போக்குவரத்து அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

'முதலில் பஸ் தொழிலைத் தேசியமயமாக்குவதில் முழுக் கவனம் செலுத்தவேண்டி இருக்கிறது; ஐந்து ஆண்டுகளுக்குள் பஸ் தொழில் முழுவதையும் தேசியமயமாக்கும் திட்டம் குறித்து முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்; இது நிறைவு பெற்ற பிறகே லாரித் தொழிலை நாட்டுடைமையாக்குவது குறித்து யோசிக்க வேண்டும்; எனவே இப்போதைக்கு அந்த எண்ணம் இல்லை."

என். கிட்டப்பா:—"தமிழகம் முழுவதிலும் லாரிக் கட்டணத்தை ஒரே சீராக வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா?"

அமைச்சர்:—"லாரியில் எந்தப் பொருளை ஏற்றிச் செல்கிறார்கள் -- எந்த இடத்திற்குச் செல்கிறார்கள் என்பதையெல்லாம் பொறுத்து லாரிக் கட்டணம் வித்தியாசப்படுகிறது; இதுபற்றி யோசிக்கலாம்.

"இப்போதைக்கு மாநில முழுவதிலும் ஒரு சீரான லாரிக் கட்டணம் வசூலிக்க ஏற்பாடு செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை."

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழியனுப்பி வைக்கும் முதல்வரும் இருக்கிறார்' என்று அங்கு வந்திருந்த பிற மாநிலத் தியாகிகள் ஆச்சரியத்தோடு கேட்டதாக டில்லிக்குச் சென்றுவந்த நமது மாநிலத் தியாகிகள் தெரிவித்தார்கள்!

இந்த அளவுக்குத் தியாகிகளை மதித்துப் பாராட்டிப் போற்றும் அரசு--கழக அரசு!

ஆகவே, இப்படிப்பட்ட தியாகிகளை மதிக்கும் சுதந்தர நாள் தேசியத் திருவிழாவாக--எல்லோருக்கும் பொதுவான நாளாக ஆக்கப்பட வேண்டும்; திருக்குறள் எப்படிப் பொதுவானதாக -- எல்லோருக்கும் பொது நூலாக இருக்கிறதோ அப்படி இந்த விழாக்கள் பொது விழாவாக இருக்க வேண்டும்."

தலைமைக் கழக அறிக்கை

மாநில சுயாட்சிப் பிரச்சார அணி என்ற பெயரில் புதிய அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தி--அதற்கு, 'தலைமை நிலையம்' என்ற ஒன்றை அமைத்து--அதற்குக் கிளை அமைப்புகளை உருவாக்கி வருவதாகவும், அதற்காக உறுப்பினர்களைச் சேர்த்து வருவதாகவும் தலைமைக் கழகத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அமைப்பு திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனுமதியையோ ஆதரவையோ பெற்று இயங்குவது அல்ல.

மாநில சுயாட்சிக் கொள்கைகளை எவ்வாறு மேற்கொள்வது--எப்படிப் பரப்புவது என்பது பற்றித் தி.மு. கழகம் முறையான முயற்சியை மேற்கொண்டு வருவதால், இதற்காகத் தனி அமைப்பு நிறுவுவது கழகக் கட்டுப்பாட்டுக்கு மாறுபட்டதாகும்.

எனவே, தி.மு. கழகத் தோழர்களும்--ஆதரவாளர்களும், 'மாநில சுயாட்சிப் பிரச்சார அணி' என்கின்ற புதிய அமைப்புக்கு எந்த வகையிலும் ஆதரவு அளிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
19-8-1972

இரா நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி.மு.க.

சென்னை 34-ல் உள்ள இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறை ஆணையாளர் முன்பாக

மனு எண்: 278/72

நிர்வாக அறங்காவலர்,
ஸ்ரீ அன்பநாயகீஸ்வரர் கோயில்,
கிடங்கல், திண்டிவனம் வட்டம்,
தென் ஆற்காடு மாவட்டம் —மனுதாரர்

தென் ஆற்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டம் கிடங்கல் கிராமம் ஸ்ரீ அன்பநாயகீஸ்வரர் கோயில் விஷயமாக:—

தென் ஆற்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டம் கிடங்கல் கிராமம் ஸ்ரீ அன்பநாயகீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமாகத் தென் ஆற்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டம் கிடங்கல் கிராமத்தில், சர்வே எண் 89-ல் உள்ள 1½ செண்ட் (கற்பக விநாயகர் பள்ளிக்கு எதிரில் உள்ள நிலம்) நிலத்தினை செண்ட் ஒன்றுக்கு ரூ. 250 (ரூபாய் இருநூற்று ஐம்பது) வீதம் நிர்ணயித்து, திண்டிவனம் வட்டம் கிடங்கல் கோட்டை, நெல்லியன் கோடன் நகர் ஸ்ரீ கற்பக விநாயகர் பாடசாலை மேனேஜர் திரு. சி. அயோத்தி முதலியார் என்பவருக்குத் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்ய அனுமதி வேண்டி 1959-ம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 34-வது பிரிவின்கீழ் செய்துகொண்ட மனு:—

நோட்டீஸ் மனு எண் 278/72 டி. 1
நாள் 9—8—1972

மேற்படி மனு குறித்து சென்னை 34, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையிலுள்ள தமது அலுவலகத்தில், இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித்துறை ஆணையாளர் அவர்களால் 23—9—1972 அன்று காலை 11-மணியளவில் விசாரணை நடத்தப்படும்.

2. மேற்படி மனு குறித்து கருத்துரைகளோ, மறுப்புரைகளோ எவையேனும் இருப்பின் அவற்றை எழுத்துமூலமாக 20—9—1972 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ இந்த அலுவலகத்திற்கு வந்து சேரும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

3. முறையீடுகள் எவையேனும் இருப்பின் அவற்றை நேரிலும் விசாரணையின்போது தெரிவித்துக் கொள்ளலாம்.

கோ. நந்தகோபால்
ஆணையாளருக்காக

சில்லறை நாணயங்கட்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோளாறு--அவற்றைக் கையாளத் தெரியாத நிலை--இவைதான் சில்லறை நாணயத் தட்டுப்பாட்டுக்குக் காரணமா?"

என்று உறுப்பினர் ஒருவர் கேட்டதற்கு, நிதித் துறை இணை அமைச்சர் 'இல்லை' என்று பதிலளித்தார்.

"கடந்த மார்ச் 31-ந் தேதி, பொதுமக்களிடம் புழக்கத்தில் இருந்த ரூபாய் நோட்டுக்கள் ரூ. 4,822 கோடி; சில்லறை நாணயங்கள் ரூ. 148 கோடி" என்றும் அவர் தெரிவித்தார்.

வருந்துகிறோம்

சென்னை, ஆக. 21—

'நம் நாடு' அலுவலகத்தில் பணியாற்றும் தோழர் ஐ. ன் இராபர்ட் அவர்களின் தந்தையார் இன்று முற்பகல் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் காலமானார்; உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர், நேற்றுத்தான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

தந்தையைப் பிரிந்து துயருறும் தோழர் இராபர்ட்டுக்கும் -- அவரது குடும்பத்தினருக்கும் நமது ஆழ்ந்த இரக்கத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible]